**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 51/2020**

Deposition of witness for பி.வா.சா. 1

Name and Age : சிவசந்திரன்

Father's/Husband Name :
Village and Taluk :
Caste and Religion :
Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (23.10.2025)

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

ஒண்ணாம் பிரதிவாதி என்னுடைய பெரியப்பா ஆவார். நான் இரண்டாம் பிரதிவாதியின் வாரிசு ஆவேன். எனக்கு இந்த வழக்கு தாவா விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு தாவா சொத்தில் தென்பகுதியில் தான் எங்களுக்கும், எனது பெரியப்பாவிற்கும் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடானது மேல வீடு, கீழ வீடா உள்ளது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கு வடக்கு பகுதியில் காலியிடமாக தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கு வடக்கு பக்கம் ஒதுக்கப்பட்ட காலி இடத்திற்கு கீழ்புறம் பொது நடைபாதை உள்ளது என்றால் சரிதான். 3 ம் பிரிதிவாதி 2005 ஆம் ஆண்டு நகராட்சியில் அனுமதி பெற்று அவரது பையன் பெயரில் காலி இடத்தில் வீடு கட்டி உள்ளார் என்றால் சரிதான். வீடு கட்டும் பொழுது பின்புறம் உள்ள பொது முற்றத்தை பார்த்து தான் வாசல் வைத்து கட்டினார் என்றால் இல்லை. அதில் படி கட்டி உள்ளார் என்றால் சரிதான். அதனால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு 2006 ஆம் வருடம் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எங்களுக்கு பாதகமாக முடிந்தது என்றால் சரிதான். வந்த வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு சொத்தினை பார்வையிட்டு பொது முற்றும் உள்ளது என்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

கடந்த 2005 ஆம் ஆண்டு நன்கொடையாக மூணாம் பிரிதிவாதி அவரது பையனுக்கு கொடுத்து, அதன் அடிப்படையில் தான் அவரது பையன் வீடு கட்டி உள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 2006 இல் நான் வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்திலும், தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்திலும் பொது முற்றத்தையும், மூன்றாம் பிரதிவாதி வகையறா புழங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது பொது முற்றத்தை மறைத்து குறுக்காக படிக்கட்டியுள்ளேன் என்றால் இல்லை. நான் வாதிகள் புழங்கி வருவதை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் சொத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் கட்சி சேர்க்கவில்லை என்று சொல்லி உள்ளது இவ்வழக்கிற்கு தேவை இல்லாதது என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கில் கூறியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரி இல்லை .

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.10.23 19:04:34 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai